In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶிவமயம்

க்ரியா க்ரம த்யோதிகா

எனும்

ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

அந்த்யேஷ்டி விதி

ஸமய-விஶேஷ-நிர்வாண-அந்த்யேஷ்டிகள்
துர்மரண-ப்ராயஶ்சித்தவிதி,
ஸம்க்ஷிப்த நிர்வாண அந்த்யேஷ்டி விதி

வெளியீடு

ஸ்ரீ ஶிவாம்ருத ஸங்கம்

திருப்புத்தூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

தென்சேரிமலை அருள்மிகு மந்த்ரகிரி வேலாயுதஸ்வாமி திருக்கோவில் குருத்வம்

ஆலாலஸுந்தர ஹரதனவாக்ய புத்ரஸந்தான மடாதிபதி

தோற்றம்
1928

ஶிவஸாயுஜ்யம்
2009

ஸ்வர்கபாரம்பவஸ்ரீ அ.உ. பாலஸுப்ரஹ்மண்ய குருக்கள்,
தென்சேரிமலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ரியா க்ரம த்யோதிகா

எனும்

ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

அந்த்யேஷ்டி விதி

ஸமய-விஶேஷ-நிர்வாண-அந்த்யேஷ்டிகள்
துர்மரண-ப்ராயஶ்சித்தவிதி,
ஸம்க்ஷிப்த நிர்வாண அந்த்யேஷ்டி விதி

வெளியீடு

ஸ்ரீ ஶிவாம்ருத ஸங்கம்

திருப்புத்தூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌶𑍍𑌰𑍀 𑌗𑌣𑍇𑌶𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌕𑍍𑌰𑌮 𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌕𑌾𑌖𑍍𑌯𑌾

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍 𑌅𑌘𑍋𑌰 𑌶𑌿𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃

𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌿 𑌵𑌿𑌧𑌿𑌃

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌃

𑌶𑍍𑌰𑍀 𑌶𑌿𑌵𑌾𑌗𑌮 𑌸𑌙𑍍𑌘𑌃

𑌶𑍍𑌰𑍀 [illegible]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூல்

தென்சேரிமலை,

அருள்மிகு மந்த்ரகிரி வேலாயுதஸ்வாமி திருக்கோயில், குருத்வம்,

ஆலாலஸுந்தர ஹரதனவாக்யபுத்ரஸந்தான மடாதிபதி,

ஸ்வர்க ஸாம்பவஸ்ரீ அ.உ.பாலஸுப்ரஹ்மண்ய குருக்கள்

அவர்களின் வர்ஷாப்திக தினமான

ஸ்வஸ்திஸ்ரீ விரோதி ஞு, மாசி மீ, 27 உ

11.03.2010 வியாழக்கிழமை

வெளியிடப்பட்டது.

ஸுபம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கக் குறிப்பு

வெளியீடு எண்	-	4
பெயர்	-	க்ரியா க்ரம த்யோதிகா எனும் ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி
பொருள்	-	அந்த்யேஷ்டி விதி
ஆசிரியர்	-	ஸ்ரீமத் அகோர ஶிவாசார்யார் (ஶாலிவாஹன ஶகாப்தம்- 1080, கி.பி-1158)
விளக்கங்கள்	-	ஶிவஸ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர், சென்னை.
தொகுப்பு	-	ஶிவஸ்ரீ.G. கார்த்திகேய ஶிவம், திருப்பரங்குன்றம்.
மொழி	-	ஸம்ஸ்க்ருதம், தமிழ்.
எழுத்து	-	க்ரந்தம், தமிழ்
எழுத்து அளவு	-	12 புள்ளிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளவு - 1/4 சைஸ்

தாள் - A-4 சைஸ் காப்பியர்

பக்கங்கள் - 224 (படங்கள் நீங்கலாக)

ப்ரதிகள் - 500

விலை -

கணினி
வடிவமைப்பு - ஸ்ரீ ஶங்கரா ஆய்வு நிறுவனம், தென்காசி.

அச்சிடல் - ஸ்ரீ ஸுந்தரம் ப்ரிண்டர்ஸ், தென்காசி.

வெளியீடு - ஸ்ரீ ஶிவாம்ருத ஸங்கம், திருப்புத்தூர்.

ப்ரதிகள் வேண்டுவோர்
94431 90783, 98424 22024 ஆகிய எண்களில்
தொடர்பு கொள்ளவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஶிவாகம கலாநிதி, ஶிவநெறிச்செம்மல்

விகாஸ ரத்ன, டாக்டர்

ஶிவஸ்ரீ. K. பிச்சை ஶிவாசார்யார் அவர்கள்

தலைமை அர்ச்சகர், ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோயில்,

முதல்வர், ஸ்ரீ கற்பகவிநாயகர் வேதாகம வித்யாலயம்,

ஸ்தாபகர், ஶிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி.

ஆசியுரை

தென்சேரிமலை, அருள்மிகு மந்த்ரகிரி வேலாயுத ஸ்வாமி திருக்கோயில் குருத்வம், ஆலாலஸுந்தர ஹரதன வாக்ய புத்ரஸந்தான மடாதிபதி, ஶிவத்திரு அ. உ. பாலஸுப்ரஹ்மண்ய குருக்கள், அவர்களது வர்ஷ ஆப்திக தினத்தில் அந்த்யேஷ்டி விதி என்ற நூலை வெளியிட இருப்பது குறித்து மகிழ்ச்சி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மநலன் கருதி ஶிவாகமங்கள் விதித்துள்ள பல கர்மங்களுள் தீக்ஷை அந்த்யேஷ்டி போன்றவற்றை நன்றாக அறிந்து, முறையாகச் செய்து வைப்பவர்கள் இக்காலக்கட்டத்தில் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

இந்நிலையில் அந்த்யேஷ்டி விதியானது சென்னை ஶிவஸ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர் அவர்கள் எழுதிய விளக்கக் குறிப்புகளுடன் வெளிவருவது அதை அனுஷ்டிப்பவர்களுக்கு மிகவும் பலன் தருவதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்நூலை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தென்சேரிமலை ஶிவஸ்ரீ A. ஆலாலஸுந்தர மந்த்ராசல ஶிவம் மற்றும் அனைவருக்கும் ஸகலநலன்களும் உண்டாக எல்லாம்வல்ல கற்பகவிநாயகப் பெருமானின் திருவடிக்கமலங்களைப் போற்றிப்பணிகின்றோம்.

அன்புடன்
ஶிவஸ்ரீ K. பிச்சைக் குருக்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவமயம்

ஶிவாகம ஶிரோமணி, ஶிவாகம கலாநிதி,

ஶிவஸ்ரீ. S.K. ராஜா பட்டர் அவர்கள்

ஸ்தானிகர், ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்

அர்ச்சகர், ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேஶ்வரர் திருக்கோயில், மதுரை

முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

கந்தன் பாதம் கனவிலும் துணைசெய்யும்

வாழ்த்துரை

தென்சேரிமலை, அருள்மிகு மந்த்ரகிரி வேலாயுத ஸ்வாமி திருக்கோயில் குருத்வம், ஆலாலஸுந்தர ஹரதன வாக்ய புத்ரஸந்தான மடாதிபதி, ஸ்வர்க ஶிவஸ்ரீ அ. உ. பாலஸுப்ரஹ்மண்ய குருக்கள், அவர்களது வர்ஷ ஆப்திக தினத்தில் அந்த்யேஷ்டி விதி என்ற நூலை வெளியிட இருப்பது மிகவும் போற்றத்தக்க செயல் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீக்ஷைக்குப் பின்னர் அறியாமல் செய்யப்படுகின்ற பாப கர்மாக்களால், ஜீவனான உயிருக்கு ஶிவத்வம் ஸித்திக்காமல் போய்விடுமே என்ற காரணத்தால், அப்பாப கர்மபல நிவ்ருத்திக்கான ப்ராயஶ்சித்தமாக *ஶி*வபெருமானே அருளிய ஒரு அவச்யமான க்ரியை அந்த்யேஷ்டி க்ரியை.

இன்று நடைமுறையில் பல்வேறு காரணங்களால் இக்-க்ரியையானது சரியாக அனுஷ்டிக்கமுடியாத நிலை நிலவுகிறது. இந்நிலையில் விளக்கக்குறிப்புகளுடன் இந்நூல் வெளிவருவது மிகுந்த பலனைத்தரும்.

இந்நூலை வெளியிடும் தென்சேரிமலை ஶிவஶ்ரீ A.ஆலாலஸுந்தர மந்த்ராசல ஶிவம் அவர்களுக்கும், மற்றோருக்கும் ஸகலநலன்களும் உண்டாக திருப்பரங்கிரிதனில் கோயில்கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

அன்புடன்

ஶிவஶ்ரீ S.K ராஜா பட்டர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவமயம்

முன்னுரை

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாம் தாம் ஆரே
வந்தவாறு எங்ஙனே போமாறு ஏதோ
மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக்கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்று
எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே!

-ஸ்ரீமத்- திருநாவுக்கரசர் பெருமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரம்

தயாவாஞ൦ வா௱ம் தகுவி ஐஷிஷூகுவு,வெஶநிஃ।
வியாய யொமஜாமெமூண கூஜெ൭ஷி௱ஹியீயதெ॥

-ஶ்ரீஜகூ வாத௲ஊாமஜ

பண்பாட்டின் தலைநகராக விளங்கும் பாரதமணித் திருநாட்டில், மனித வாழ்வின் ஒவ்வொருகட்டமும் இறைவனுடன் தொடர்புபடுத்தப்பட்டே இருக்கிறது.

பிறப்பிற்குக் காரணமான கர்பாதானம் முதல் ஶரீரத்தின் முடிவில் செய்யப்படுவதான அந்த்யேஷ்டி வரையிலான அனைத்து ஸம்ஸ்காரங்களும் இறைவனை முன்னிலைப்படுத்தப்பட்டே நடத்தப்படுகிறது.

இறைவன் முன்னிலை அல்லாத ஒரு நிகழ்வு இல்லவே இல்லை. மணிவாசகப் பெருமானின் "போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே" என்ற வாக்கு இதைத் தெளிவுபடுத்துகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்வின் முதல் பொருளாக மட்டுமின்றி வாழ்வின் குறிக்கோளாகவும் அவ்விறைவனே விளங்குகின்றான். கர்பாதானம் முதல் செய்யப்படுகின்ற ஸம்ஸ்காரங்கள் யாவும் ஸம்ஸ்கரிக்கப்படும் அவ்வுயிரை உயர்ந்த ஒரு நிலைக்கு அழைத்துச் செல்லும் வண்ணமாகவே அமைந்துள்ளது.

ஸம்ஸ்காரம் என்ற சொல் அதன் பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது. எந்த ஒரு க்ரியையினால் எந்த ஒரு பொருளுக்கு, எந்த ஒரு பொருளை அடையும் தகுதி ஏற்படுகிறதோ அந்த க்ரியைக்கு ஸம்ஸ்காரம் என்று பெயர்.

"𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌃 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑌾𑌤𑍇 𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌃" அதாவது பசு எனப்படும் உயிரானது பரம்பொருள் எனப்படும் இறைவனை அடைவதற்கான தகுதியை வழங்கவல்லது ஸம்ஸ்காரம் ஆகும் எனப் பொருள் வழங்குவர் பெரியோர்.

இறைவனை அடைவதற்கான தகுதியை அளிக்கின்றன அந்த ஸம்ஸ்காரங்கள் என்பதால் அத்தகுதியைப் பெறுவதற்கு எதிராக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
இருக்கும் தோஷங்களையும் அவை நீக்குகின்றன என்பதும் பெறப்படும்.

வைதிக ஸம்ஸ்காரங்கள் ஆத்மகுண அபிவ்யக்தி மற்றும் ப்ரஹ்மப்ராப்தியையும், ஶைவிக ஸம்ஸ்காரங்கள் ஶிவத்வ வ்யக்தியையும் ஏற்படுத்துபவைகளாக விளங்குகின்றன என்பதை கீழ்க்காணும் வாக்யங்கள் விளக்குகின்றன.

ஸ்வாயஹ்ாயெந வ்ரதைஃ ஹொமைஃ

த்ரைவிஜெ்யந ஐஜ்யயா ஸுதைஃ।

ஃஹாயஜ்ஞைஶ்ச யஜ்ஞைஶ்ச ப்ராஹ்மீயம் க்ரியதெ தநுஃ॥

--மநுஸ்ம்ருதிஃ

பொருள் : வேத அத்யயனம், வ்ரதங்கள், ஹோமங்கள், வேத யஜ்ஞங்கள், யாகங்கள், குழந்தைகள், மஹாயஜ்ஞங்கள், யஜ்ஞங்கள் ஆகியவற்றைச் செய்வதால் அவை மனிதனது உடம்பை ப்ரஹ்மமயமாகச் செய்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்ரகர்மா யதாநேகை: ரங்கை: உந்மீல்யதே ஶநை:।
ப்ராஹ்மண்யமபி தத்வத் ஸ்யாத் ஸம்ஸ்காரை: விதி பூர்வகை:॥

-வாராஹஸ்ம்ருதி:

பொருள்: ஓவியரானவர் எங்ஙனம் பலவிதமான வர்ணப்பூச்சுகளால் சிறிது சிறிதாக வரைந்து நிறைவாக ஒரு உருவத்தை வெளிப்படுத்துகிறாரோ, அதுபோல விதிப்பூர்வமாகச்செய்யப்படுகின்ற ஸம்ஸ்காரங்களும் மனிதனிடத்தில் ப்ராஹ்மண்யத்தை வெளிப்படுத்துகின்றன.

ஸர்வாஶ்ரய விஶ்லேஷம் ஶிவத்வம் வ்யஜ்யதே யயா।
க்ரியா ஸா கத்யதே தீக்ஷா பக்தி வைராக்ய லக்ஷணா॥

-ஸ்ரீமத் காரணாகம:

பொருள்: எதனால் ஆணவம், ஸஞ்சிதம்-ஆகாமி எனும் கர்மங்கள், மாயை எனும் மும்மல நீக்கமும், ஶிவத்வ அபிவ்யக்தியும் ஏற்படுகிறதோ அந்தக் க்ரியை பக்தி வைராக்ய லக்ஷணமுடைய தீக்ஷா என்று அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
அதுபோலவே அந்த்யேஷ்டி என்ற ஸம்ஸ்காரமும் ஜீவனுக்கு ஶிவத்வத்தை வெளிப்படுத்தவல்லதாகவும், தீக்ஷைபெற்ற பின்னர் தெரியாமல் செய்த விஹித கர்ம அனாசரணம், நிஷித்த கர்ம ஆசரணம்; அதாவது விதிக்கப்பட்டதைச் செய்யாமல் இருத்தல், தடைசெய்யப்பட்ட கர்மங்களைச் செய்தல் ஆகிய இருகர்மங்களாலும் உண்டான பாபங்களுக்குப் ப்ராயஶ்சித்தமுமாக, ஓர் அற்புதமான அவச்யமான க்ரியையாகத் திகழ்கிறது.

ஒருவர் புத்திபூர்வமாகச் செய்கின்ற பாபங்களுக்குப் ப்ராயஶ்சித்தத்தை அவரே செய்து கொள்ளலாம். அபுத்திபூர்வமான பாபங்களுக்கு ப்ராயஶ்சித்தமாகக் கூறப்பட்டுள்ள அந்த்யேஷ்டியைச் செய்ய இயலாது. ஆனால் அபுத்தி பூர்வமான பாபங்களும் கண்டிப்பாக தீயபலன்களை அளித்தே தீரும் என்ற காரணத்தால் அபுத்திபூர்வமான பாபங்களுக்கு ப்ராயஶ்சித்தமான அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரமானது மிகவும் கவனமாகச் செய்யப்படவேண்டும்.

கால அவகாஶக் குறைவு, சோகமான மனநிலை, க்ரியைகளை நன்றாக அறிந்து செய்து வைப்பவர்கள் கிடைக்காத நிலை ஆகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரணங்களால், இக்காலக்கட்டத்தில் அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரமானது சரியாகச் செய்யமுடிவதில்லை. மேலும், அந்த்யேஷ்டி முதலான அபரக்ரியைகளை அமங்கல க்ரியைகளாக எண்ணும் மனப்பாங்கும் நம்மக்களிடையே காணப்படுகிறது. ஒருவர் அறியாமல் செய்த பாபத்திற்கு ப்ராயஶ்சித்தமாகவும், ஶிவத்வ வ்யக்தியையும் வழங்கவல்லதான ஒரு க்ரியையை எப்படி அமங்கலக் க்ரியை என்று கூறமுடியும்?

எனவே நம் மக்கள் அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரத்தின் அவஶ்யத்தை உணர்ந்து, ஶிவாகமங்கள், தர்மஶாஸ்த்ரங்கள் திருக்குறள் போன்ற ஞானநூல்களில் கூறப்பட்டுள்ள நிலையாமையை நன்கு அறிந்து, மனம் தளராமல், இறந்தவருடைய நன்மையை உத்தேசித்து முறையாக அனுஷ்டிக்க முயற்சிசெய்ய வேண்டும்.

எனவே அந்த்யேஷ்டியை நன்றாக அனுஷ்டிக்கும் நிலை ஏற்படவேண்டும் என்ற நல்ல சிந்தனையுடன், தென்சேரிமலை, அருள்மிகு மந்த்ரகிரி வேலாயுத ஸ்வாமி திருக்கோயில் குருத்வம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
ஸ்வர்க ஸாம்பவஸ்ரீ அ. உ. பாலஸுப்ரஹ்மண்ய குருக்கள், ஆலாலஸுந்தர ஹரதன வாக்ய புத்ரஸந்தான மடாதிபதி, அவர்களது வர்ஷ ஆப்திக தினமான மாசி மீ", 27 உ 11.03.2010 அன்று, அந்த்யேஷ்டி விதியானது வெளியிடப்படுகிறது.

ஸ்ரீமத் அகோரஶிவாசார்யார் இயற்றிய இந்த அந்த்யேஷ்டி விதியானது திருவாரூர் ஸ்ரீ நிர்மலமணிதேஶிகர் அவர்கள்இயற்றிய ப்ரபா எனும் வ்யாக்யானத்துடன், சிதம்பரம் ஸ்ரீமத் ஆறுமுகநாவல ஸந்தான பீடாதிபதி, ஸ்ரீமத் அம்பலவ நாவல ஜ்ஞானஸம்பந்த பராஶக்தி ஸ்வாமிகள் அவர்களால் 1927ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

பின்னர், சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ஷண்முகஸுந்தர முதலியார், ஸ்ரீ அழகப்ப முதலியார் அவர்களால் ஒருமுறையும், பிறகு 1971ம் ஆண்டு, சென்னை, தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கத்தின் சார்பாக, அச்சங்கத்தின் பொதுக் கார்யதர்சி, ஶிவஸ்ரீ C. ஸ்வாமிநாத ஶிவாசார்யார் அவர்களால் ப்ரபா வ்யாக்யானம் இன்றித் தமிழ் அர்த்தத்துடன் ஒரு முறையும் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றுள் சிதம்பரத்தில் வெளியிடப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலானது பிள்ளையார்பட்டி, ஶிவநெறிச் செம்மல், விகாஸ ரத்னா டாக்டர். ஶிவஶ்ரீ கி. பிச்சை ஶிவாசார்யார் அவர்களது பெருமுயற்சியில் அவரது 60ம் ஆண்டு மணிவிழாவில் 06.09.2008 அன்று வெளியிடப்பட்டது.

இந்நூல் அனுஷ்டானத்திற்கு மிகவும் உதவியாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், உரையின்றி மூலம் மட்டும், சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரிப் பேராசிரியர், ஶிவாகமச் செல்வர், வ்யாகரண ஶிரோமணி, ஶிவஶ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர் அவர்கள் எழுதிய விளக்கம் மற்றும் விஷயச் சுருக்கங்கள், க்ரியா க்ரம வழிகாட்டி ஆகியவற்றுடனும், அவரது ஸஹோதரர் ஶிவஶ்ரீ ஸே. கபாலிவைத்யநாத குருக்கள் அவர்கள் வரைந்த விளக்கப் படங்களுடனும் தற்போது வெளியிடப்படுகிறது. சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரிப் பேராசிரியர் ஶிவாகமச் செல்வர், வ்யாகரண ஶிரோமணி, ஶிவஶ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர் அவர்கள் எழுதியுள்ள விளக்கங்கள், க்ரியா க்ரம வழிகாட்டி, மண்டப அமைப்பு விளக்கம் போன்றவை மிகவும் பயனுள்ளவை ஆகும். தன்னலம் கருதாது அவர் செய்யும் பல பணிகள் போற்றிவணங்கத்தக்கவை. ஶைவ உலகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
குறிப்பாக ஶிவாசார்ய ஸமுதாயம் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

அந்த்யேஷ்டியின் அவச்யத்தை உணர்ந்து, அதை நன்றாகச் செய்ய வழிசெய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இந்நூலை வெளியிடவேண்டும் என்று கூறி என்னை இப்பணியில் ஈடுபடச்செய்த தென்சேரிமலை ஶிவஸ்ரீ A.ஆலாலஸுந்தர மந்த்ராசல ஶிவம் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூல்வெளியீட்டுப் பணியில் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய, **சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி**, **வ்யாகரணப் பேராசிரியர் ஶிவஸ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர்** அவர்களது சரணாரவிந்தங்களை போற்றிப் பணிந்து வணங்குகின்றேன்.

நன்றி

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது

- திருக்குறள்

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இந்நூல் வெளியீட்டுப் பணியில் பல்வேறு உதவிகள் செய்து வெளிவர உதவி புரிந்த, சென்னை, ஶிவஶ்ரீ ஸே. கபாலிவைத்யநாத குருக்கள், காரைக்கால், ஶ்ரீகண்ட ஶிவாசார்ய வித்யாபீட ஶிவாகம அத்யாபகர், கடப்பாக்கம், ஶிவஶ்ரீ திருக்குமரன் ஶிவம் அவர்கள், சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, கணினி அலுவலர் ஶ்ரீ கணபதி அவர்கள், திருப்பரங்குன்றம் வைஷ்ணவி கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தார், குறிப்பாக, ஸௌ. ஶங்கரீ அவர்கள், திருப்பரங்குன்றம் ஶ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலய மாணவச் செல்வங்கள், தென்காசி ஶங்கரா ஆய்வு நிறுவனத்தார் ஆகியோருக்கும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலை நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த தென்காசி ஸுந்தரம் அச்சகத்தாருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, அனைவருக்கும் ஸகலநலன்களும் உண்டாக எல்லாம்வல்ல இறைவன் உமையொருபாகன் வண்டார்குழலி உடனுறை அருள்மிகு ஆலங்காட்டீஶனின் திருவடிமலர்களைப் போற்றிப் பரவுகின்றோம்.

"ஹரநம: பார்வதீ பதயே ஹரஹர மஹாதேவ"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பேரன்புடன்

ஶிவசரணகமலைகஶரண்யன்

ஶிவஸ்ரீ. G.கார்த்திகேய ஶிவம்.

ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்,

திருப்பரங்குன்றம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டியின் அவசியம்

கர்மாவின் பயனாக ஆன்மா பிறவியை எடுக்க நேரிடுகிறது. எனவே கர்மா உள்ளவரை பிறவி உண்டு. அதேஸமயம் எல்லா வினைகளுக்கும் ஒரு எதிர்வினை அவசியம் உண்டு என்ற நியதியின்படி பார்த்தால், முதல் கர்மாவிலிருந்து இரண்டாவது கர்மா - இரண்டாவதிலிருந்து மூன்றாவது கர்மா என்றவாறு இந்த கர்மாக்களின் தொடர்ச்சியானது முடிவற்றதாகவே விளங்குகிறது. எனவே கர்மாக்கள் முடிவற்றதாய் இருப்பதால் கர்மாக்களின் பயனாகிய பிறப்புகளும் முடிவற்றனவே என்றாகிவிடுகிறது. இவ்வாறு இருந்தால் ஆன்மாக்களுக்கு மோக்ஷநிலை என்பது அறவே கிடையாது என்ற நிலை ஏற்படுகிறது.

இந்நிலை மாறி, ஆன்மாக்களுக்கும் மோக்ஷநிலை ஏற்படுவதின் பொருட்டு இறைவனால் விதிக்கப்பட்டதே தீக்ஷை என்ற ஸம்ஸ்காரமாகும். தீக்ஷையில், ப்ரபாவம் வாய்ந்த சிவாசார்யரால் மந்த்ரப்ரபாவத்தினால் கர்மாக்கள் அனுபவிக்கப்பட்டவைகளாகவும், எதிர்வினையற்றவைகளாகவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யப்படுவதால், ஆன்மாக்கள் தீக்ஷையினால் மறுபிறப்பற்றவைகளாகவும் மோக்ஷத்திற்குத் தகுந்தவைகளாகவும் செய்யப்படுகின்றன.

ஆனால், மேற்படி தீக்ஷையிலும் கூட அனைத்துக் கர்மாக்களும் அழிக்கப் பட்டுவிட்டன என்பது கிடையாது. அதாவது, கர்மாக்கள் மூன்று விதமானவை: ப்ராரப்தம், ஸஞ்சிதம், ஆகாமி என்று. இப்பிறப்பிற்கு முன்பு பல பிறப்புகளில் நாம் எந்தெந்த கர்மாக்களை செய்து முடித்திருக்கிறோமோ அவை எல்லாவற்றிற்கும் ஸஞ்சிதம் என்று பெயர். அந்த ஸஞ்சித கர்மாக்கள் அனைத்திற்கும் நிஶ்சயமாக ஒவ்வொரு பயன் அவஶ்யம் உண்டு. விதையை விதைத்தல் என்பது ஒரு வினை. அந்த வினையால் அவஶ்யம் ஏற்படக்கூடிய பயன் என்பது விளைந்த பயிராகும். பயிர் விளைந்ததால் அதனை அறுவடை செய்தல் என்ற ஒரு வினை கட்டாயம் ஏற்படுகிறது. இதேபோல் பிற எல்லா விஷயங்களிலும் வினை, வினையிலிருந்து பயன், அப்பயனை அனுபவிக்க மற்றுமொரு வினை என்று இத்தொடர்ச்சி நில்லாது இருந்துகொண்டே இருக்கும். அதேபோல முற்பிறவியில் நாம் செய்த ஒவ்வொரு கர்மாவிலிருந்தும் ஒரு பயன் அவஶ்யம் ஏற்பட்டுள்ளதால், அப்பயனை அனுபவிக்க, மற்றுமொரு வினையை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறாக முற்பிறவியில் நாம் செய்துள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
பல கர்மாக்களுள் எந்தெந்த கர்மாக்கள், அவ்வவற்றின் பயன்களைத்தர ஆரம்பித்துவிட்டனவோ அந்தந்த கர்மாக்களுக்கு ப்ராரப்தம் என்று பெயர்.

மேற்படி ப்ராரப்தகர்மாக்களின் பயன்களை நாம் அனுபவிப்பதற்காகவே இறைவன் இவ்வுடலை அளித்திருக்கிறார். எனவே ப்ராரப்தகர்மாவின் பயன்களை முழுவதுமாக அனுபவிக்கவேண்டிய காலம் வரை இவ்வுடல் அவஶ்யம் இருக்கும். அதாவது இவ்வுடல் தானாக அழியும்வரை ப்ராரப்தகர்மா அல்லது ப்ராரப்தகர்மாவின் பயன்கள் அவஶ்யம் இருக்கின்றன என்பது அடையாளம். இவ்வுடல் அழிந்துவிட்டால் ; இவ்வுடலைவிட்டு உயிர் தானாக பிரிந்துவிட்டால், உயிரால் அனுபவிக்கப்படவேண்டிய ப்ராரப்தகர்ம பயன்கள் தீர்ந்துவிட்டன என்பது பொருளாகிறது.

இந்த ப்ராரப்தகர்ம பயன்கள் முழுவதுமாக அனுபவிக்கப் பட்டதினாலேயே அனைத்து கர்மாக்களும் தீர்ந்துவிட்டன என்பது கிடையாது. ஏனெனில் பல பிறவிகளில் நாம் செய்த கர்மாக்களுள் ஒரு பகுதியானது பயனைத்தர முற்படும்போது அதற்குமட்டும்தான் ப்ராரப்தம் என்று பெயர். எஞ்சியுள்ள கர்மாக்கள் ஸஞ்சிதம் எனப்படுகின்றன. எனவே ஒரு ப்ராரப்தகர்மபயன் அனுபவிக்கப்பட்ட பின்பு மற்றொரு ஸஞ்சித கர்மாவானது அதன் பயன்களைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர முற்படும். அந்நிலையில் அந்த ஸஞ்சிதகர்மாவானது ப்ராரப்தம் என்று சொல்லப்படும். இவ்வாறாக பல ஸஞ்சிதகர்மாக்களின் காரணமாக பல பிறப்புகள் இருந்துகொண்டேதான் இருக்கும்.

சரி ! ஸஞ்சிதகர்மாக்களும் ஒரு குறிப்பிட்ட ஸமயத்தில் தீர்ந்துபோய் அற்றதாகிவிடுமல்லவா? என்றால் அது கிடையாது. அந்தந்த ப்ராரப்த கர்மாக்களின் பயன்களை அனுபவிப்பதன் பொருட்டு நாம் எந்தெந்த கர்மாக்களை செய்யவேண்டியுள்ளதோ அவைகளெல்லாம், செய்வதற்கு முன்பு 'ஆகாமி' என்ற பெயரில் இருக்கும். செய்து முடித்தபிறகு ஸஞ்சிதம் என்ற நிலையை அடைந்து விடும். எனவே இவ்வாறாக மூன்றுவிதமான கர்ம பாஶங்களுக்கு உட்பட்டு ஆன்மாக்கள் பல பிறப்புகளுக்கு உள்ளாகின்றன.

இவற்றுள் ஸஞ்சிதம், ஆகாமி என்ற இருவித கர்மாக்களுள் ஸஞ்சிதமானது தீக்ஷையில் அழிந்ததாகச் செய்யப்படுகின்றது. ஆகாமியானது, த்யானம், பூஜை போன்றவற்றால் அழியும். ப்ராரப்த கர்மாக்களை அதாவது ப்ராரப்த கர்மாவின் பயன்களை அனுபவிப்பதற்காக நாம் செய்யக்கூடிய கர்மாக்கள் இருவிதமானவை. ஒன்று ஶைவ ஸமய ஒழுக்கம் சார்ந்தவை. இதனை ஸமயாசாரபாஶ: என்று குறிப்பிடுவர். மற்றொன்று ஶைவ ஸமய ஒழுக்கம்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சார்ந்தவை. அதாவது, இப்பிறவியில் அனுஷ்டானம் செய்தல், ஶிவபூஜை செய்தல் போன்றவையெல்லாம் ஏதோ ஒரு ப்ராரப்தகர்மாவின் பயனை அனுபவிப்பதற்காக ஏற்பட்டவை. இவை ஸமயாசாரபாஶங்கள் எனப்படுபவை. மற்றபடி மண், பொன், பெண் போன்றவைகளின் பொருட்டு இப்பிறவியில் நாம் மேற்கொள்ளும் கர்மாக்களானது ஏதோ ஒரு ப்ராரப்த கர்மாவின் பயனை அனுபவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதானாலும், அவை ஸமய ஒழுக்கம் சார்ந்தவை அல்ல. எனவே, ஸமயாசாரங்களுக்கு அடிப்படையாக நிற்கக்கூடிய ப்ராரப்தகர்மாக்கள், பிற நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக நிற்கக்கூடிய ப்ராரப்தகர்மாக்கள் என்று ப்ராரப்தகர்மாக்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

ப்ராரப்தகர்மாவின் அடிப்படையில் இந்த ஶரீரம் தோன்றியுள்ள காரணத்தால் ப்ராரப்த கர்மாவினை அழித்துவிடுதல் என்பது இச்சரீரத்தினை அழிப்பதற்கு ஸமமாகும். இச்சரீரத்தினை அழிப்பதை எந்த ஶாஸ்த்ரங்களும் ஒத்துக் கொள்ளாததால் ப்ராரப்தகர்மாவை முழுவதுமாக தீக்ஷையில்கூட அழிக்க முடியாது. அதேஸமயம், ஸமய ஆசாரங்களுக்கு அடிப்படையான ப்ராரப்த கர்மாக்களை விட்டுவிட்டு பிற கர்மாக்களை அழிப்பதனால் இப்பிறவியில் இந்த ஶரீரத்தில் அனுபவிக்கப்பட வேண்டிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போகங்கள் வலுவிழந்தவைகளாக ஆகிவிடுகின்றன. ஸமயாசாரத்திற்கு அடிப்படையான ப்ராரப்த கர்மாக்கள் அழிக்கப்படாததால் ஸமயாசாரத்திற்குத் தேவையான போக்ய வஸ்துக்கள் கிடைப்பதில் எந்தத் தடையுமிருக்காது. ஆனால் ஸமயாசாரங்கள் கூட தேவைப்படாதவர்கள் விஷயத்தில் ஸமயாசாரத்திற்கு அடிப்படையான ப்ராரப்தகர்மாக்களும் தீக்ஷையில் அழிக்கப்படுகின்றன.

எனவே, மேற்படி மூன்று கர்மாக்களுள் 'புபுக்ஷு' போன்றோர் விஷயத்தில் ஸமயாசாரத்திற்கு அடிப்படையான ப்ராரப்தகர்மாக்கள் எஞ்சியிருக்கின்றன. 'முமுக்ஷு' போன்றோர் விஷயத்தில் ஸமயாசாரங்களுக்கு அடிப்படையான ப்ராரப்தகர்மாக்களும் அழிக்கப்படுகின்றன. பிற ப்ராரப்தமானது, ஶரீரம் அழிந்தால், அழிந்துவிடும்.

இவ்வாறு இருந்தாலும், தீக்ஷைக்குப் பின், ஒருவர், விதிக்கப்பட்டதை செய்யாமலிருந்தாலோ, நிந்திக்கப்பட்டதைச் செய்தாலோ அதனால் ஏற்படக்கூடிய கர்மாவிற்கு எவ்வாறு அழிவு ஏற்படும் எனில், விதிக்கப்பட்டதை தான் செய்யாததை பிற்பாடு அறிந்த பின்பும், அதேபோல் நிந்திக்கப்பட்டதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
தான் செய்ததை அறிந்தபின்பும் அவற்றிற்குரிய ப்ராயஶ்சித்தங்களைச் செய்வதால் அவ்விருவகையான கர்மாக்களும் அழிந்துவிடுகின்றன. அவ்வாறு, தவற்றினை அறிந்துகொண்ட பின்பும் ப்ராயஶ்சித்தம் செய்யாவிட்டால் 100 வருடங்கள் அசுரப்பிறப்பு ஏற்படும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆனால், ஒருவன் தான் நிந்திக்கப்பட்டதை செய்திருக்கிறோம் ! என்றோ, விதிக்கப்பட்டதை செய்யாமலிருக்கிறோம் என்றோ, அறவே அறிந்து கொள்ளாத பக்ஷத்தில் ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ள வாய்ப்பே கிடையாது ! எனினும் அறியாமையால் செய்த கர்மாவிற்கும் உரிய பலன் உண்டு என்ற காரணத்தினால், சொன்னதை செய்யாமலிருத்தல், சொல்லப்படாததை செய்தல் ஆகிய இருவித கர்மாக்களால் நிஶ்சயமாக தீய பலன் ஏற்பட வாய்ப்புண்டு, ப்ராயஶ்சித்தம் செய்யப்படாததால். இவ்விரு கர்மாக்களையும் அழிப்பதற்கான ஒரே ஸாதனமாக இருப்பது ‘அந்த்யேஷ்டி’ என்பது. எனவே, செய்யப்பட்டும்கூட, அறியப்படாததால், ப்ராயஶ்சித்தம் செய்யப்படாத கர்மாக்களை ஶூத்தம் செய்வதற்கு = அழிப்பதற்கு அந்த்யேஷ்டி ஒன்றே வழியாகும். எனவே, ஶைவஸமயத்தில் அந்த்யேஷ்டி என்பது ஒரு சிறந்த ஸம்ஸ்காரமாகக் கருதப்படுகின்றது. எனவே, அந்த்யேஷ்டியை அவஶ்யம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டப அமைப்பு

அந்த்யேஷ்டி மண்டப அமைப்பு

9 முழம் (அ) 7 முழம் (அ) 5 முழம்* அகல நீளம் கொண்டது.
16 (அ) 12 ஸ்தம்பங்கள் கூடியது.
தோரணத்துடன் கூடியது.

---

* கீழ்க்கண்ட பக்ஷத்திற்கு 5 முழ யாகஶாலை போதுமானதல்ல

மத்தியில் குண்டத்தின் அமைப்பு¤

சதுர வடிவம். ஒரு முழ அகல நீளம்.
மேகலை அளவு : 6 அங்குல உயரம் ; 6 அங்குல அகலம்

அக்னி மூலையில் சிதாவின் அமைப்பு¤

2 முழம் அகலம் ; 4 முழம் நீளம் ;
8 (அ) 6 அங்குல ஆழம் (தெற்கு வடக்கு நீள அமைப்பு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிருருதி மூலையில் பஞ்ச கவ்ய மேடை¤

வாயு மூலையில் யாகேஶ்வர ஸ்தண்டில அமைப்பு¤

1 முழம் அகல நீளம் ; 6 அங்குல உயரம்

ஈஶான மூலையில் அஸ்த்ர வர்தனிக்கு வேதி அமைப்பு¤

¤ குண்டத்தின் மண்ணைக் கொண்டு அனைத்தையும் கட்டுதல் வேண்டும். குண்டத்தினைச் சுற்றி 1 முழம் விட்டு, பிறவற்றைக் கட்ட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டி விதி

க்ரியா க்ரம வழிகாட்டி

- மரணமடைந்தவரை ஸ்நானம் செய்வித்தல்.
- கீழுக்கும் மேலுக்கும் இரு செவ்வாடை அணிவித்தல்.
- தன் ஜாதிக்குத் தக்கவாறு (ஶைவ) பூணூல் அணிவித்தல். (விஶேஷ தீக்ஷைப்படி - ப்ராஹ்மணர் 7 ; க்ஷத்ரியர் 3 ; வைஶ்யர் 2 ; ஶூத்ரர் 1)
- உத்தரீயம் அணிவித்தல்.
- இரு கைவிரல்களில் இரு பவித்ரங்களை அணிவித்தல்.
- புஷ்பமாலை போன்றவற்றால் அலங்கரித்தல்.
- ஆஸந்தியில் உடலை ஏற்றுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- வெள்ளைத்துணியால் இரு கால் கட்டைவிரல்களைக் கட்டுதல்.
- யதாஸம்பவம் சித்ரவிமானத்தில் ஏற்றுதல்.
- ஒரே வர்ணத்தைச் சார்ந்த நான்கு தீக்ஷிதர்கள் உபவீதத்தினை அபஸவ்யமாகப் போட்டுக்கொண்டு அஸ்த்ரமந்த்ரத்தினை ஜபித்துக் கொண்டு தோளில் சுமந்து செல்லுதல்.
- முன்புறத்தில் அக்னியும், பின்புறத்தில் பந்துக்களும் பின்தொடர ஶங்கு முதலிய த்வனியுடன் கூட வடக்குமுகமாக (கால் வடக்கு திசை, தலை தெற்கு திசை) எடுத்துச் செல்லுதல்.
- ஸமீபத்தில் ஜலப்ரதேஶத்தையுடையதும், ஈஶான திக்கிலோ அல்லது பிற திசைகளிலோ அமைக்கப்பட்டதுமான ஶ்மஶானத்தில் தெற்குப்பக்கம் தலை இருக்கும்படி வைத்தல்.
- தெற்கு திசையில் ஜலவாட்டம் கொண்ட அவ்விடத்தில் பந்தல் போன்றவற்றை அமைத்தல்.
- படத்தில் காண்பிக்கப்பட்ட முறையில் வேதிகை போன்றவற்றை அமைத்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- குருவானவர் ஸ்நானம் செய்துவிட்டு ஸகளீகரணம் செய்துகொண்டு அஸ்த்ரவர்தனியை எடுத்துக்கொண்டு அப்ரதக்ஷிணமாக மண்டபத்தில் ப்ரவேஶித்தல்.
- தர்பாஸனத்தில் வடக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு விபரீதக்ரமத்தில் பூதஶுத்யாதி, ஶிவஹஸ்த கரண பர்யந்தம் செய்து கொள்ளுதல்.
- நைருத மூலையில் பஞ்சகவ்யம் ஸாதித்தல்.
- மண்டப ஸம்ஸ்காரம் செய்தல்.
- சிதை அமைக்கப்படவேண்டிய இடத்தில் படத்தில் உள்ளபடி 25 வண்ணக் கோஷ்டங்களை அமைத்து பூஜித்து பலியிடுதல்.
- ஈஶான மூலையில் வர்த்தனீ கலஶத்தில் பாஶுபதாஸ்த்ரத்தை ப்ரதமாவரண பர்யந்தம் பூஜித்தல்.
- மண்டபத்தின் ஈஶானம் முதலிய திஶைகளில் உள்ள 8 கலஶங்களில் த்ரிஶூலம் முதலிய எட்டு ஆயுதங்களை அப்ரதக்ஷிண க்ரமத்தில் வஜ்ரம் வரை பூஜித்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- நிருருதியின் வடக்குப்புற கலஶத்தில் சக்ரத்தைப் பூஜித்தல்.
- ஈஶானத்தின் தெற்கு கலஶத்தில் பத்மத்தைப் பூஜித்தல்.
- வாயு மூலையில் கலஶத்தில் (யாகேஶ்வர) ஶிவனை போகாங்க பர்யந்தம் விபரீத க்ரமத்தில் த்வாரபால பூஜையுடன் பூஜித்தல்
- குண்டத்தில் பாலாக்னியை தயார் செய்து தர்ப்பண தீபன பர்யந்தம் அக்னி கார்யம் செய்தல்.
- சிதையில் நாற்கோணம் மற்றும் முக்கோணத்தினை படத்திலுள்ளபடி வரைந்து பூஜித்தல்.
- சிதையின் ஆக்னேயாதி மூலைகளில் அப்ரதக்ஷிணமாக, காய்ந்த 4 முளைக்குச்சிகளை நுனி கீழ்ப்புறமாகவும், அடி மேற் புறமாகவும் இருக்கும்படி நடுதல்.
- 5 வர்ணங்களைக் கொண்ட நூலினாலோ சிவப்பு நூலினாலோ அப்ரதக்ஷிணமாகக் குச்சியின் வெளியே சுற்றுதல்.
- சந்தனம் முதலிய யஜ்ஞ கட்டைகளால் சிதையை நிரப்புதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- சிதையைச் சுற்றிலும் அப்ரதக்ஷிணமாகத் துணியால் சுற்றுதல்.
- தர்பை, புஷ்பம் மற்றும் எள்ளினால் சிதையை பூஜித்தல்.
- உடலை பஞ்ச கவ்யம், கோ ஜலம் போன்றவற்றினால் ஸ்நானம் செய்வித்தல்.
- விபூதியால் உத்தூளனம் செய்வித்தல்.
- ஜாதியைப் பொருட்படுத்தாமல் ஒரு பூணூல் அணிவித்தல்.
- இரு வஸ்த்ரங்களை அணிவித்தல்
- குண்டத்தின் வலது புறத்தில் உடலைக் கிடத்துதல். உடலுக்கு பூதஶுத்தியைச் செய்வித்தல்.
- மஹாஜால ப்ரயோகத்தின் மூலமாக இறந்தவரின் தீக்ஷா நாமத்துடன் கூடிய மந்த்ரத்தால் அவரது உயிரை மறுபடியும் அவர் உடலில் சேர்ப்பித்தல்.
- தீக்ஷையில் செய்தது போலவே அவ்வுடலின் இடது கையில் தர்ப்பையின் அடியை வைத்து, தர்ப்பையின் நுனியைத் தனது காலிடுக்கில் (ஆடுசதைப் பகுதியில்) சேர்த்துக் கொண்டு நாடீ ஸந்தானம் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- ஸமயானுஷ்டான குறைபாடு போன்றவை நீங்க ஹோமம் செய்தல். (இதுவரை உள்ளதை அனைவருக்கும் பொதுவாகச் செய்து, பிறகு அவரவர்களுக்கு உள்ளவற்றைச் செய்ய வேண்டும்.)

ஸமய தீக்ஷை மட்டும் செய்துகொண்டவர் விஷயத்தில் :

○ அவரது உயிரை ஆசார்யரின் உயிருடன் ஸமரஸப் படுத்திக்கொண்டு, பூர்ணாஹுதியின் வாயிலாக அவ்வுயிரை ஶிவபெருமானிடத்தில் சேர்ப்பித்தல்.

விஶேஷ தீக்ஷை வரை செய்துகொண்டவர் விஷயத்தில் :

✡ அக்னியில் வாகீஶீ - வாகீஶர்களைப் பூஜித்தல்.

✡ ஶிஷ்யனின் உயிரை, முறைப்படி வாகீஶீ கர்ப்பத்தில் சேர்த்து ஹோமம் செய்தல்.

✡ மறுபடியும் அங்கிருந்து எடுத்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- ✡ பூர்ணாஹுதியின் வாயிலாக அவ்வுயிரை ஶிவபெருமானிடத்தில் சேர்ப்பித்தல்.

(கீழுள்ளவை அனைவருக்கும் பொதுவானவை. நிர்வாணதீக்ஷிதர்கள் விஷயத்தில் கீழே உள்ள க்ரியைகளில் சில அதிகப்படியானவை)

- வாகீஶீ - வாகீஶ்வர விஸர்ஜனம் போன்றவை அனைவருக்கும் பொதுவானவை.
- ஸ்தண்டிலத்தில் பூஜிக்கப்பட்ட ஶிவபெருமானை குண்டத்தில் பூஜிக்கப்பட்ட ஶிவபெருமானுடன் சேர்த்தல்.
- குண்டத்தில் பூஜிக்கப்பட்ட ஶிவபெருமானை ஶிவாக்னியில் ஒடுக்குதல்.
- தெற்கே தலைவைத்தபடிக்கு உடலை சிதாவில் ஏற்றுதல்.
- துணியால் போர்த்துதல்.

(நிர்வாண தீக்ஷிதர்கள் விஷயத்தில் இவ்விடத்தில் ஶிவகும்பத்தால் சுற்றிவருதல் போன்றவை உண்டு.)

- நல்ல கட்டைகளால் மூடுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- குண்டத்தில் உள்ள மொத்த ஶிவாக்னியாலும் எரித்தல்.✲
- தலைப்புறத்தில் நின்றுகொண்டு, நெய், தேன், பால் ஆகியவற்றால் நிரப்பப்பட்ட பூர்ணாஹுதியைச் செய்தல்.
- அஸ்த்ர வர்தனீயை இடது தோளில் சுமந்து கொண்டு, பின்புறம், இடைவிடாது ஜலதாரை விழும்படி அப்ரதக்ஷிணமாகச் சுற்றி, அதன் இடத்தில் கவிழ்த்து வைத்தல்.
- எதையும் பார்க்காதவாறு, நீர் நிலைக்குச் சென்று குளித்தல்.

✲ இது, விஸர்ஜனம் செய்யப்படாத ஶிவாக்னி என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். எரிப்பதற்கு வாட்டமாக, சிதாவின் கால் பகுதியிலேயே குண்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் நினைவிற் கொள்ளற்பாலது. எனவே, மறுநாள் 'தத்வஹோமம்' செய்யும்வரை ஶிவாக்னியானது இருக்க வேண்டும் என்பதும் கவனிக்கத் தக்கது. மறுநாள்தான் ஶிவாக்னி விஸர்ஜனம் போன்றவை. அக்னி நஷ்டமானால் மறுநாள் மறுபடியும் குண்ட ஸம்ஸ்காரம் போன்றவை செய்யப்படுதல் வேண்டும், என்பது போன்றவை ப்ரபா வ்யாக்யானத்தால் அறியத்தக்கவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- மூன்று நிவாபாஞ்ஜலி தர்பணம் செய்தல்.
- மறுபடியும் குளித்து, ப்ராயஶ்சித்தத்திற்கு (நிர்வாண தீக்ஷிதர் விஷயத்தில் சொல்லப்பட்ட மந்த்ரங்களைத் தக்கவாறு) ஜபம் செய்தல்.

(நிர்வாண தீக்ஷிதர் விஷயத்தில் சொல்லப்பட்ட, சோகத்தை நீக்குதல், வேப்பிலைகளைச் சாப்பிடுதல் போன்றவற்றையும் இவ்விடத்தில் அனுஷ்டிக்கலாம்.)

நிர்வாண தீக்ஷை வரை செய்துகொண்டவர் விஷயத்தில் :

- பாஶ ஸூத்ரம் - கர்தரி ஸம்ஸ்காரம்.
- உடலில் ஶிகையில் பாஶஸூத்ரத்தைக் கட்டுதல்.
- ஸூத்ரத்தில் ஸுஷும்நாபூஜை.
- ஆத்மாவினை பாஶ ஸூத்ரத்தில் சேர்த்தல்.
- ஆணவ - கர்ம - மாயா பாஶங்களையும், நிவ்ருத்யாதி கலைகளையும் உடலிலிருந்து எடுத்து, பாஶஸூத்ரத்தின் அந்தந்த இடத்தில் சேர்த்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- இறந்தவரின் ஜாதி, ஆயுள், பல்வேறு போகங்கள், ஸமயாசாரங்கள் ஆகிய அனைத்தும் பாஶஸூத்ரத்திற்கு உட்பட்டதாக பாவித்தல்.
- பாஶஸூத்ரத்தின் அந்தந்த இடங்களில் குங்குமாதிகளால் அடையாளம் போன்றவற்றைச் செய்தல்.
- ஸூத்ரத்தின் அந்தந்த இடங்களில் க்ரந்திகல்பனம் செய்தல்.
- நிவ்ருத்தி முதலான ஐந்து கலைகளுக்கு உட்பட்ட தத்வங்கள், புவனங்கள், வர்ணங்கள், பதங்கள், மந்த்ரங்கள் ஆகியவற்றை ஸூத்ரத்தில் முறையே விஸ்தாரமாக பாவித்தல்.
- மேற்படி கலைகளுக்கு உட்பட்ட புவனங்களில், ஆன்மாவானது வாகீஶ்வரீ-வாகீஶ்வரர்களின் அனுக்ரஹத்தால் எல்லா யோனி பேதங்களிலும் பிறந்து, திளைத்து, இளைத்து முழுநிறைவு கொண்டதாய் முறையே பாவித்தல்.
- அந்தந்த கலைகளின் காரணேஶ்வரர்களான ப்ரஹ்மாதிகள் அனுக்ரஹத்தால் ஆன்மாவானது அந்தந்த கலைகளிலிருந்து முறையே மீண்டதாக பாவித்தல் போன்றவைகளைச் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- மேற்படி விஷயங்கள் ஒரு கலையில் நிகழ்ந்த பின்பு, பாஶஸூத்ரத்தின் அந்த பகுதிகளை கத்தரியால் வெட்டி ஹோமம் போன்றவற்றைச் செய்த பின்பு, அடுத்தடுத்த கலைகள் தொடர்பான கார்யங்களைச் செய்தல் வேண்டும்.
- இறந்தவரின் ஶிகா வடிவமாக திரோதான ஶக்தியை பாவித்து, ஶிகாச்சேதம் செய்து ஹோமம் செய்தல்.
- ஶிகையின் நுனியில் = திரோதான ஶக்தியின் மேல் (அனுக்ரஹ ஶக்தியின் கீழ்) அப்பழுக்கற்று நிற்கும் ஆத்மாவினை பூர்ணாஹுதியின் வாயிலாக ஶிவபெருமானிடத்தில் சேர்ப்பித்தல்.
- ஆத்மாவிற்கு ஆறு குணங்கள் வெளிப்படவேண்டி ஹோமம் செய்தல்.
- கலஶத்தில் பூஜிக்கப்பட்ட ஶிவபெருமானை அக்னியில் உள்ள ஶிவபெருமானிடம் சேர்ப்பித்தல்.
- அக்னியிலுள்ள ஶிவபெருமானை ஶிவாக்னியில் சேர்ப்பித்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- உடலை சிதையில் ஏற்றுதல்.
- துணியால் மூடுதல்
- இறந்தவர் க்ருஹஸ்தரானால், அவரின் மகனோ, ஜ்ஞாதியோ அல்லது ஶிஷ்யரோ குளித்துவிட்டு, உபவீதத்தை அபஸவ்யமாகப் போட்டுக்கொண்டு ஶிவகும்பத்தினை தலையில்தரித்து இடையறாது ஜலம் விழும்படிக்கு மும்முறை அப்ரதக்ஷிணமாக சிதையைச் சுற்றுதல்.
- தலைப்பகுதியில் நின்றுக்கொண்டு, ஓர் கட்டையால் கலக்கப்பட்ட அந்தக் கும்பத்தின் ஶேஷ ஜலத்தை எடுத்துக்கொண்டு அதில் பாலுடன் சேர்ந்த அரிசியையும், ஸ்வர்ணங்களையும் வைத்துக்கொண்டு, அவற்றை இறந்தவரின் வாயில் பித்ரு மந்த்ரத்தினை உச்சரித்துக்கொண்டு (அக்ஷதைகளை) போடுதல்.
- சந்தனக்கட்டை போன்றவற்றால் மூடுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- குண்டத்திலுள்ள அனைத்து அக்னியாலும் சிதையை ஜ்வலிக்கும்படிச் செய்தல்.✿ (குண்டத்திலிருக்கும் அக்னியை முழுவதுமாக உடலின் தலைப்பகுதியில் இடுதல் என்பதும் முறையில் உள்ளது).
- தலைப்பகுதியில் நின்றுகொண்டு நெய், தேன், பால் ஆகியவற்றால் நிரப்பப் பட்ட பூர்ணாஹுதியை 'ஓம் த்வமக்னே' என்ற மந்த்ரத்தை உச்சரித்து செய்தல்.
- பூர்ணாஹுதியின் விளக்கம் :

ஹே ! அக்னியாகிய ருத்ரரே ! நீர் ஶக்தி வாய்ந்த காலன் என்ற அகோரராக விளங்குகிறீர்கள். அனைத்தையும் ஸம்ஹாரம் செய்யும் அகோரருத்ரராகிய

✿ இது, விஸர்ஜனம் செய்யப்படாத ஶிவாக்னி என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். எரிப்பதற்கு வாட்டமாக, சிதாவின் கால் பகுதியிலேயே குண்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் நினைவிற் கொள்ளற்பாலது. எனவே, மறுநாள் 'தத்வஹோமம்' செய்யும்வரை ஶிவாக்னியானது இருக்க வேண்டும் என்பதும் கவனிக்கத் தக்கது. மறுநாள்தான் ஶிவாக்னி விஸர்ஜனம் போன்றவை. அக்னி நஷ்டமானால் மறுநாள் மறுபடியும் குண்ட ஸம்ஸ்காரம் போன்றவை செய்யப்படுதல் வேண்டும், என்பது போன்றவை ப்ரபா வ்யாக்யானத்தால் அறியத்தக்கவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீர், ஶவம் சார்ந்ததான இந்த ஆஹுதியை ஏற்பீராக. இந்த ஶவ உடலானது, தீக்ஷை பெற்ற பின்பு ஒவ்வொரு நாளும் மந்த்ரங்களை உடலில் ந்யாஸம் செய்து கொள்ளுதல் போன்றவற்றால் மிகவும் புனிதமாகத் திகழ்கிறது. மேலும் தற்போது செய்யப்பட்ட அந்த்யேஷ்டி கர்மாவின் மந்த்ர ஸம்ஸ்காரங்களாலும் இவ்வுடல் தூய்மையாக்கப்பட்டதாகத் திகழ்கிறது (உணவு, மூலிகைகள் போன்றவற்றின் வாயிலாக மறுபடியும் உண்டுபண்ணத் தக்கதான). காலத்தால் இந்நிலையடைந்ததான, தூய்மையான இந்த ஶவ உடலையே ஆஹுதியாக ஏற்பீராக.

- பிறகு ஆசார்யாபிஷேகம் செய்து கொண்டவர் பக்ஷத்தில் அவரது இடதுபுறத்தில் ஸ்ருக்-கினையும், வலது புறத்தில் ஸ்ருவத்தினையும் கவிழ்த்து வைத்தல்.
- நிர்வாண தீக்ஷை பெற்றவர் விஷயத்தில் ஸ்ருக்-ஸ்ருவங்களை சிதையிலேயே வைத்துவிடுதல்.
- சிதையை ஸம்ஸ்கரிக்கத்தக்க நால்வரை அமர்த்துதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- வர்தனீ கலஶத்தினை இடது தோளில் ஏற்றிக்கொண்டு பின்புறமாக இடைவிடாது ஜலத்தினை விட்டுக்கொண்டு பந்துக்களால் பின்தொடரப் பட்டவராய் அப்ரதக்ஷிணமாகச் சுற்றுதல்.
- வர்தனீயின் இடத்திலேயே அதனைக் கவிழ்த்து வைத்தல்.
- பின்பு திரும்பிப்பார்க்காமல் நீர்நிலைக்குச் சென்று குளித்துவிட்டு கரையில் மூன்று நிவாபாஞ்சலி தர்பணம் செய்தல்.

(இது முதற்கொண்டு அனைவரும் அனுஷ்டிக்கலாம்.)

- மறுபடியும் குளித்து ப்ராயஶ்சித்தத்தின் பொருட்டு அகோரமந்த்ரத்தை 108 முறை ஜபித்தல்.
- பின்தொடர்ந்து வந்தவர்கள் ஸம்ஹிதா மந்த்ரங்களையோ, அகோர மந்த்ரத்தையோ நூறு முறை ஜபித்தல்.
- தோள் சுமந்தவர்களும், எரித்து ஸம்ஸ்காரம் செய்தவர்களும் இருமடங்கு அதிகமாக ஜபம் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- ஆகமவாக்யங்களாலும், ஶாஸ்த்ர வாக்யங்களாலும் யாக்கையின் நிலையாமையை நன்கு உணர்ந்து கொண்டு ஶோகத்தினைத் தவிர்த்தல்.
- வீட்டின் வாயிலை அடைந்து வேப்பிலைகளைச் சாப்பிடுதல்.
- ஆசமனம் செய்து அக்னி, ஜலம், கோமயம், வெண்கடுகு ஆகியவற்றைத் தொடுதல்.
- ஒரு கருங்கல்லில் பாதத்தினை பதித்துவிட்டு வீட்டிற்குள் செல்லுதல்.
- தன்னையும் இறந்தவரையும் முன்னிட்டு இறைவனைப் பூஜித்தல்.
- பிறரால் கொண்டுவரப்பட்டதும், சுவையற்றதுமான உணவினை, ப்ராணாதாரமாக மட்டும் நினைத்து பிற்பகலில் உணவு உட்கொள்ளுதல்.
- அன்றுமுதல் பாஷாண ஸ்தாபனம் செய்தல்.
- அன்றோ, மூன்றாம் நாளோ, நான்காம் நாளோ, ஐந்தாம் நாளோ, ஏழாம் நாளோ அல்லது ஒன்பதாம் நாளோ அஸ்தி ஸஞ்சயனத்திற்கு முன்பு தத்வாஹுதி போன்றவற்றைச் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- அஸ்தியை முறைப்படி தூய இடத்திலோ அல்லது ஸமுத்ராதி தீர்த்தத்தின் ஆழத்திலோ வைத்தல்.
- சாம்பலை ஆழமான ஜலத்தில் இடுதல்.
- பத்தாம் நாள் ருத்ர பலி, பாஷாண உத்தாபனம் போன்றவற்றைச் செய்தல்.
- வருட இறுதியில் ஸபிண்டீகரண ஶ்ராத்தம் செய்தல் அல்லது 12 போன்ற நாட்களில் மாஸ்ய சோதகும்பங்களோடு கூட ஸபிண்டீகரண ஶ்ராத்தம் செய்தல்.

இவ்வாறு ஸபிண்டீகரண ஶ்ராத்தபர்யந்தம் அந்த்யேஷ்டி செய்யப்படுவதால் அதன்பின்பு ஸமயவிஶேஷதீக்ஷை ஆனவர்கள் ஸ்கந்தபதம், சண்டபதம், கணாதீஶபதம் ஆகியவற்றையும், நிர்வாண தீக்ஷை ஆனவர்கள் ஈஶபதம், ஸதாஶிவபதம், ஶாந்தபதம் ஆகியவற்றையும் முறையே ஒன்றன்பின் ஒன்றாக அடைகிறார்கள். ஆன்மாவிற்கு 'ஶிவஸமத்வம்' என்ற தன்மை முழுவதுமாக வெளிப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'க்ரியாக்ரம வழிகாட்டி' என்ற இப்பகுதி ஒரு மிகச்சிறிய, மிகச்சுருக்கமான ஒரு விளக்கமேயாகும். எனவே, பிற நுணுக்கமான விஷயங்களை, மூலத்தினையும், உரையையும் விரிவாகப்பார்த்துத் தெளிதல் வேண்டும்.

𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍋𑌽𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌚𑍈𑌵 𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌵𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌃।
𑌨𑍇𑌯𑌃 𑌶𑌿𑌵𑌪𑌦𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞-𑌕𑌾𑌰𑌣 𑌉𑌦𑍍𑌧𑌾𑌰𑌮𑍍॥

-𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍 𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌗𑌮𑍇, 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 -𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌿𑌧𑌿𑌃

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டி பொருள் பட்டியல்

கருப்பு எள்ளு
வெள்ளை எள்ளு
விபூதி
சந்தனம்
சாம்பிராணி (அ) ஊதுபத்தி
கற்பூரம்
பாக்கு (அ) சீவல்
7 தான்யங்கள் :
நெல், அரிசி, பயறு, உளுந்து, கோதுமை, துவரை, எள்ளு.
வெண் கடுகு

யவை நெல்
நெற்பொறி
பூணூல் (7 + 1)
முப்பிரி நூல்
பஞ்சவர்ண நூல் (அ) சிவப்பு நூல்
திரி நூல்
தீப்பெட்டி
நல்லெண்ணை
பசு நெய்
தேன்
தொன்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டி பொருள் பட்டியல்

கருப்பு எள்ளு

வெள்ளை எள்ளு

விபூதி

சந்தனம்

சாம்பிராணி (அ) ஊதுபத்தி

கற்பூரம்

பாக்கு (அ) சீவல்

7 தான்யங்கள் :

நெல், அரிசி, பயறு, உளுந்து,
கோதுமை, துவரை, எள்ளு.

வெண் கடுகு

யவை நெல்

நெற்பொறி

பூணூல் (7 + 1)

முப்பிரி நூல்

பஞ்சவர்ண நூல் (அ) சிவப்பு நூல்

திரி நூல்

தீப்பெட்டி

நல்லெண்ணை

பசு நெய்

தேன்

தொன்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாக்கு தொன்னை

பாக்கு மட்டை தட்டுகள்

(வாசனாதி தீர்த்த சாமான்கள் வேண்டாம்)

<u>கலர் பொடிகள்</u>	<u>மூலப் பொருட்கள்</u>
மஞ்சள்	மஞ்சள் தூள் (அ) கந்தகம்
வெள்ளை	அரிசி மாவு (அ) யவை (அ) கோதுமை
சிவப்பு	காவித்தூள் (அ) செந்தூரம் (அ) செங்கல் தூள்
கருப்பு	உமியின் கரித்தூள் (அ) கரித்தூள்
பச்சை	புரச இலைப் பொடி

பாலு ஸூத்ரம்

பாலு ஸூத்ரத்தை நறுக்க கத்தரிக்கோல்

குண்டத்திற்கு செங்கல்

மண் - குண்டம், சிதை, பஞ்சகவ்ய மேடை, ஸ்தண்டிலம், வேதீ ஆகிய எல்லாம் ஒரே மண்ணால் பூசப்பட வேண்டும்.

மணல்

சமித்து (புரசு)

தர்பை

சந்தனம் முதலிய கட்டைகள்

விராட்டி

ஸ்ருக்ஸ்ருவம்

தர்பைக்கயிறு

அத்திமரத்தாலான ஆஸந்தீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கம் (நிர்வாண தீக்ஷிதர் விஷயத்தில் வாக்கரிசியுடன் போடுவதற்கு)

சிவப்பு வேஷ்டி - 1,
சிவப்பு அங்கவஸ்த்ரம் - 1,
த்ருதீய உத்தரீயம் - 1
(வீட்டில் அலங்கரிக்க)

வெள்ளைத் துணி
(இரு கால் விரல்களை சேர்த்து கட்டுவதற்கு)

வஸ்த்ரம் (சிதாவை சுற்றுவதற்கு)
வஸ்த்ரம் (சிதாவை மூடுவதற்கு)

வெள்ளை வேஷ்டி -1,
வெள்ளை அங்கவஸ்த்ரம் - 1
(ஶ்மஶானத்தில் அணிவிக்க)

சிவப்பு துணி - 1
(6 முழம் - வர்தனீ)

வெள்ளைத்துணி - 1
(8 முழம் - ஶிவகும்பம்)

4 முழத் துண்டு - 10
(அஸ்த்ர கும்பங்களுக்கு)

இலை
வெற்றிலை
மாவிலை
அத்தி இலை
புரச இலை

மாலை
உதிரிப்பூ
சிவப்பு சரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருகம் புல்
வாழைப்பழம்
தேங்காய் - சுமார் 13
பெரிய கலயம் (அ) குடம் - 1
சிறிய கலயம் (அ)
சிறிய குடம் - 10
மூக்கு வைத்த கிண்டி - 1
மண் பல்லா
மண் மடக்கு
அகல் விளக்குகள்
குடுவை (பூஜா பாத்ரங்கள்)
ஓலைத்தடுக்கு, தர்பாஸனம்
வாட்டர் கேன் (அ)
தண்ணீர் (எடுக்க) குடம்

பால்
தயிர்
கோமயம்
கோஜலம்
நெய்

மண் வெட்டி
அரிவாள், கத்தி
கடப்பாரை
பெரிய கூடை
மூங்கில் தட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவமயம்

க்ரியாக்ரமத்யோதிகா விஷயஸூசீ

அந்த்யேஷ்டி விதி:

விஷய:	ப்ருஷ்ட:
1. அந்த்யேஷ்டி பற்றிய சில தகவல்கள்	1
2 ஆசார்யாதீநாம் அந்த்யேஷ்டி ப்ரகாரபேத:	3
3. விபந்நஸ்ய பித்ருவநப்ரதேஶப்ராபணப்ரகார:	5
4. ஶவ நிர்ஹரண விதி:	8
5. ஶவபஞ்ஜா ஸம்ஸ்காரணீய விதி:	9

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

6. உணுவ வஜா வியி8 — 14

7. ஊநிகாய௨ வியி8 — 30

8. ஊநிஷ௭தூஜெ ஶிவ சூவாஷநாஜி கூ௨8 — 43

9. உிதாவூாநெ வியீயஊாந கஊ௨ாணி — 47

10. ஊ௭தஂ விஷயீகூ௭த௳ கூ௭த௳வியி8 — 48

11. ஜெஶாஜனொ ஊ௭தவஸ௳ கூஶாஜிநிஜிூத ஶாீரவஸ௳ வஸஊயிநொ விஶெஷ வியி8 — 49

12. வெ௫தவஸ௳ வஸஂவஸாவநாஜ௳நஜா கூணீயவியி8 — 50

13. வஸாஊாந௳ வஸஊயிநொ யொஜநா வியி8 — 53

14. வஸஊயி யொஜநாநஜா கூணீய வியி8 — 54

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஶேஷ ஸங்கல்பவிதி:

15. விஶேஷ ஸங்கல்ப விதி: 60

16. ஶவஸ்நாந விதி: 64

17. ஶவஸ்நாநாநந்தர கரணீய விதி: 68

நிர்வாண ஸங்கல்பவிதி:

18. நிர்வாண ஸங்கல்பவிதி: 70

29. நிவ்ருத்திகலா ஶுத்தி: 80

20. ப்ரதிஷ்டாகலா ஶுத்தி: 95

21. வித்யாகலா ஶுத்தி: 105

22. ஶாந்திகலா ஶுத்தி: 113

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23.	ஶாஙூதீதகுறா ஶாஷி:	120
24.	ஶிவாஷ்டோத்தர விதி:	129
25.	ஶூத்ரயொஜநா ப்ரகார:	130
26.	உத்வொசாவந விதி:	132
27.	ஶவஹந விதி:	135
28.	ஶவஹநாநந்தர கார்ணீய விதி:	138
29.	ஸ்வர்திர்வ ப்ரவெஶாஜிகு:	140
30.	ஜாதகஶீக்ஷா விஷய விஶேஷ:	142
31.	ஜீர்ணோத்தர ப்ராயஶ்சித்த விதி:	151
32.	ஸம்க்ஷிப்த நிவர்ண கஹைஷ்டி விதி:	154

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அந்த்யேஷ்டி' பற்றிய சில தகவல்கள்

இருவகை அந்த்யேஷ்டி யாவை?

1. அத்வ ஶுத்தி அற்ற அந்த்யேஷ்டி
2. அத்வ ஶுத்தியுடன் கூடிய அந்த்யேஷ்டி

யாருக்கு எது?

ஸமய தீக்ஷை மட்டும் பெற்றவருக்கு	- முதல்வகை
விஶேஷ தீக்ஷைவரைப் பெற்று குருஶுஶ்ரூஷாவில் ஈடுபட்டு நிர்வாண தீக்ஷையை விரும்பியவர், நிர்வாண தீக்ஷை வரைப் பெற்றவர், ஸாதகாபிஷேக தீக்ஷைப் பெற்றவர், ஆசார்யாபிஷேகம் செய்யப்பெற்றவர்.	- இரண்டாம் வகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டி எதற்கு?

தீக்ஷைக்குப் பின்பு, தீக்ஷை செய்து கொண்டவருக்கு, ஸமய-ஆசாரலோபங்களால் (குறைபாட்டால்) ஏற்படும் பாவங்களுக்கான ப்ராயஶ்சித்தமே அந்த்யேஷ்டி ஆகும்.

அந்த்யேஷ்டி - சொல் விளக்கம்

அந்த்ய = கடைசியில் நிகழும்

இஷ்டி = யாகம்

மற்றொரு பொருள் அந்த்ய = பர தத்வத்தினைச்

இஷ்டி = சென்றடைதல்

ஆன்மா பரதத்வத்தினை அடையவேண்டி யோக மார்கத்தோடு கடைசியில் செய்யப்படும் யாகமே 'அந்த்யேஷ்டி' ஆகும். இறந்தவரின் ஶர்மாவினையும், தீக்ஷாநாமத்தினையும் தெரிந்துகொண்டு, பிறகு அந்த்யேஷ்டியைச் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶ்ரீரஸ்து ||

அந்த்யேஷ்டிவிதி: ||

ஆபஸ்தம்பீநாம் அந்த்யேஷ்டி-ப்ரகாரபேத: ||

அத அந்த்யேஷ்டிவிதி:। ஆபஸ்தம்ப-ஸாமக-ஸூத்ராணாம் அந்த்யேஷ்டி: [illegible] கர்தவ்யா। [illegible]। [illegible] நிவ்ருத்த-[illegible] [illegible] ஸஹிதா விதேயா||

விஷயக் குறிப்புகள்

இறந்தவரை ஶ்மஶானத்திற்கு எடுத்துச் செல்லும் முன் இல்லத்தில் செய்யவேண்டியவை

- மரணமடைந்தவரை ஸ்நானம் செய்வித்தல்.
- கீழுக்கும் மேலுக்கும் இரு செவ்வாடை அணிவித்தல்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

- தன் ஜாதிக்குத் தக்கவாறு (ஶைவ) பூணூல் அணிவித்தல்.

(விஶேஷ தீக்ஷைப்படி - ப்ராஹ்மணர் 7; க்ஷத்ரியர் 3; வைஶ்யர் 2; ஶூத்ரர் 1)

- உத்தரீயம் அணிவித்தல்.
- இரு கைவிரல்களில் இரு பவித்ரங்களை அணிவித்தல்.
- புஷ்பமாலை போன்றவற்றால் அலங்கரித்தல்.
- ஆஸந்தியில் உடலை ஏற்றுதல்.
- வெள்ளைத்துணியால் இரு கால் கட்டைவிரல்களைக் கட்டுதல்.
- யதாஸம்பவம் சித்ரவிமானத்தில் ஏற்றுதல்.
- ஒரே வர்ணத்தைச் சார்ந்த நான்கு தீக்ஷிதர்கள் உபவீதத்தினை அபஸவ்யமாகப் போட்டுக்கொண்டு அஸ்த்ரமந்த்ரத்தினை ஜபித்துக் கொண்டு தோளில் சுமந்து செல்லுதல்.
- முன்புறத்தில் அக்னியும், பின்புறத்தில் பந்துக்களும் பின்தொடர ஶங்கு முதலிய த்வனியுடன் கூட வடக்குமுகமாக (கால் வடக்கு திசை, தலை தெற்கு திசை) எடுத்துச் செல்லுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- ஸமீபத்தில் ஜலப்ரதேஶத்தையுடையதும், ஈஶான திக்கிலோ அல்லது பிற திசைகளிலோ அமைக்கப்பட்டதுமான ஶ்மஶானத்தில் தெற்குப்பக்கம் தலை இருக்கும்படி வைத்தல்.
- தெற்கு திசையில் ஜலவாட்டம் கொண்ட அவ்விடத்தில் பந்தல் போன்றவற்றை அமைத்தல்.

[illegible]

[illegible]

In Public domain, Digitization Muthulakshmi Research Academy
படத்தில் காண்பிக்கப்பட்ட முறையில்
வேதிகை போன்றவற்றை அமைத்தல்

மண்டப அமைப்பு

அந்த்யேஷ்டி மண்டப அமைப்பு

9 முழம் (அ) 7 முழம் (அ) 5 முழம்★[1] அகல நீளம் கொண்டது.

16 (அ) 12 ஸ்தம்பங்கள் கூடியது.

தோரணத்துடன் கூடியது.

மத்தியில் குண்டத்தின் அமைப்பு¤

சதுர வடிவம். ஒரு முழ அகல நீளம்.

மேகலை அளவு : 6 அங்குல உயரம் ; 6 அங்குல அகலம்

---

[1] ★ கீழ்க்கண்ட பக்ஷத்திற்கு 5 முழ யாகஶாலை போதுமானதல்ல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த்யேஷ்டி மண்டபம்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னி மூலையில் சருவின் அமைப்பு¤

2 முழம் அகலம் ; 4 முழம் நீளம் ;

8 (அ) 6 அங்குல ஆழம் (தெற்கு வடக்கு நீள அமைப்பு)

நிருருதி மூலையில் பஞ்ச கவ்ய மேடை¤

வாயு மூலையில் யாகேஶ்வர ஸ்தண்டில அமைப்பு¤

1 முழம் அகல நீளம் ; 6 அங்குல உயரம்

ஈஶான மூலையில் அஸ்த்ர வர்தனிக்கு வேதி அமைப்பு¤

¤ குண்டத்தின் மண்ணைக் கொண்டு அனைத்தையும் கட்டுதல் வேண்டும். குண்டத்தினைச் சுற்றி 1 முழம் விட்டு, பிறவற்றைக் கட்ட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

[illegible]

[illegible]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷயக் குறிப்புகள்

மண்டபத்தில் செய்யவேண்டிய க்ரியைகள்

- குருவானவர் ஸ்நானம் செய்துவிட்டு ஸகளீகரணம் செய்துகொண்டு அஸ்த்ரவர்தனியை எடுத்துக் கொண்டு அப்ரதக்ஷிணமாக மண்டபத்தில் ப்ரவேஶித்தல்.
- தர்பாஸனத்தில் வடக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு விபரீதக்ரமத்தில் பூதஶுத்த்யாதி, ஶிவஹஸ்த கரண பர்யந்தம் செய்து கொள்ளுதல்.

மண்ட³பபூஜா பூர்வகரணீய விதி⁴:॥

அத² கு³ரு: ஸ்நாத: ஸகலீக்ருத:, அஸ்த்ரவர்த⁴நீம் க்³ருஹீத்வா, அப்ரத³க்ஷிணம் மண்ட³பாந்திகம் க³த்வா, அஸ்த்ரக்ருத-த³ர்ப⁴-க்ருதாஸநோபரி ஸௌம்யாஸ்ய: உபவிஶ்ய, வாமாவர்தேந விக்⁴நாந்-உச்சாட்ய,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌹𑌸𑍍𑌤𑌤𑌲-𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌂 𑌸𑌂𑌶𑍋𑌧𑍍𑌯, 𑌅𑌮𑍃𑌤𑍀𑌕𑍃𑌤𑍍𑌯,
𑌤𑌲𑌯𑍋𑌃 𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑌿𑌷𑍁 𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑌾𑌨𑌿
𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌕𑌵𑌚𑍇𑌨 𑌅𑌪𑌸𑌵𑍍𑌯-𑌅𑌵𑌗𑍁𑌣𑍍𑌠𑍍𑌯, 𑌪𑌾𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌵𑌿𑌹𑌿𑌤
𑌦𑍇𑌹𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌪𑌾𑌦-𑌗𑍁𑌹𑍍𑌯-𑌹𑍃𑌦𑌯-
𑌮𑍁𑌖-𑌮𑍂𑌰𑍍𑌧𑌸𑍁 𑌸𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍇𑌹-𑌨𑍇𑌤𑍍𑌰-
𑌮𑍂𑌲𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑌿-𑌕𑌰𑌾𑌙𑍍𑌗-𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌷𑍁
𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌤𑌾𑌲𑌤𑍍𑌰𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌦𑌿𑌗𑍍𑌬𑌨𑍍𑌧𑌂
𑌅𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾, 𑌦𑌰𑍍𑌭𑍇𑌣 𑌦𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌶𑌮𑌯𑍇𑌤𑍍।

𑌤𑌤𑌃 𑌸𑌂𑌹𑌾𑌰-𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤-𑌅𑌰𑍍𑌘𑍍𑌯-𑌪𑍂𑌜𑌨-𑌹𑌵𑌨-𑌧𑍍𑌯𑌾𑌨𑌃-
𑌸𑍍𑌥𑌾𑌨𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌰𑍍𑌧𑌨𑍀𑌤𑍋𑌯𑍇𑌨 𑌅𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯,
𑌤𑌜𑍍𑌜𑌲𑍈𑌃 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯, 𑌸𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌯𑌾 𑌸𑌂𑌹𑌿𑌤𑌯𑌾

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஶெஷாவ௯௶ கூரகூா, ஓ வ௯ாண௯ஹ௯‾கூஷ௯, ஞூத்தாநஂ ஜஷ்ஷா, ஊஞ்ஶ௱‾ஊிஂ வியாய, கூயூஶ௱‾ஊிவிஷயெ நிவரத்த௯ாஜி-கூஞ்ாஃ ஸஂஹா௱கூ௵ணெ ஷ்வெஹெ விந௯ஸ௯, ஸஞ்ஹாஜ்ஜஂ ஶிவஂ ந௯வெகூ।

தஜொ ஊகூஷிண-ஹஸ்த-தலெ வாஃ-கூஜ்ஜ‾ஷெந மஙலெவிதெ ஊஷெ௯ ஞூஸநஃ௵தீஃ விந௯ஸ௯, கூநிஷ்ஷாஜிஷ‾ ஸஜ௯ாஜிவஞகூஂ விந௯ஸ௯, விஜ௯ாஷெஹ-ஶெத்ர ந௯ாஸாநஞ௱ஂ ஶிவஊாவாஹ௯, ஹரஜயாஜ௯ஜ்ஜாநி கூநிஷ்ஷாஜிஷ‾ விந௯ஸ௯, வ௱ஃகூரத௯, ஷ்ஶி௱ஷி கூயிளாவ௯, ஞ்ஹ௱ஞ்-வ்ர விஷெந-தெஜஸா ஞாஹ௯ாஹ௯ஞ௱ஂ தஃஃவடமுஜ-ஞூய௵ய, வ்ரஷெ௯ாதித-ஜிமஞ௱ஂ ஸஂஹாவ௯, ஜ்ஞாநவஜ்ஜஂ ஸவ்யா-கூஸ்ஜஜ்ஜாஜாய, ஶிவஂ ஷ்ரகூா,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நைருத மூலையில் பஞ்சகவ்யம் ஸாதித்தல்.

𑌤𑌤𑍋 𑌨𑍈𑌋𑌤𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑍇 𑌨𑌵𑌪𑌦𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌮𑌧𑍍𑌯𑍇 '𑌓𑌂 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑌿 𑌕𑍋𑌷𑍍𑌠𑌂, '𑌓𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑌿 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂, 𑌤𑌤𑍍𑌰 𑌪𑌯𑌃 𑌶𑌙𑍍𑌖𑍇𑌨 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌯, 𑌸𑌕𑍃𑌤𑍍-𑌸𑌂𑌹𑌿𑌤𑌯𑌾, 𑌏𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 '𑌓𑌂 𑌮𑌹𑌾𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃', '𑌓𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌙𑍍𑌗𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌧𑌿 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣-𑌤𑍍𑌰𑌿𑌃, 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 '𑌓𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃' '𑌓𑌂 𑌤𑍇𑌜𑍋𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌘𑍃𑌤𑌂 𑌅𑌘𑍋𑌰𑍇𑌣-𑌤𑍍𑌰𑌿𑌃, 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇 '𑌓𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃' '𑌓𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑍇𑌨-𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌾𑌰𑌂, 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 '𑌓𑌂 𑌕𑌾𑌰𑌣𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯 𑌨𑌮𑌃' '𑌓𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌤𑌤𑍍𑌰 𑌗𑍋𑌮𑌯𑌂

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑍇𑌨 𑌵𑌧𑍍𑌯𑌾, 𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑍇 '𑍐 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯
𑌨𑌮𑌃' '𑍐 𑌪𑍁𑌰𑍁𑌷𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌕𑌲𑍍𑌪𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑍂𑌲𑍇𑌨 𑌶𑍋𑌧𑌯𑌿𑌤𑍍𑌵𑌾,
𑌐𑌶𑌾𑌨𑍍𑌯𑌾𑌂 𑌬𑌲𑌿𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌶𑌯𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑍍𑌰𑌮𑍇𑌣-𑌬𑌲𑍇
𑌕𑌲𑍍𑌪𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌮𑍂𑌲𑍇𑌨 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯, 𑌪𑌾𑌤𑍍𑌰𑌃 𑌸𑌕𑌲𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾
𑌸𑍍𑌰𑍁𑌕𑍍𑌸𑍍𑌰𑍁𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾, 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯-𑌪𑌵𑌕𑌾𑌰𑍍𑌣𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌂।
𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑍇 𑌮𑍂𑌲𑍇𑌨 𑌪𑍋𑌷𑌿𑌤𑌾𑌰𑌭𑌤𑍍𑌯-𑌬𑌲𑌿𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌪𑍁𑌷𑍍𑌪𑌣
𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯, 𑌕𑌾𑌲-𑌹𑌸𑍍𑌤-𑌦𑍍𑌰𑌵𑍍𑌯-𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿-𑌪𑌸𑍍𑌤 𑌦𑍍𑌰𑍍𑌵𑌿𑌤𑌾𑌦𑌿 𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌯,
𑌅𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌹𑌵𑌾𑌚𑌨-𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌯𑌾𑌂
𑌸𑌮𑌾𑌹𑌰𑌤𑍍॥

விஷயக் குறிப்புகள்

மண்டப ஸம்ஸ்காரம் செய்தல்.

சிதை அமைக்கப்படவேண்டிய இடத்தில் படத்தில் உள்ளபடி 25 வண்ணக் கோஷ்டங்களை அமைத்து பூஜித்து பலியிடுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊணுவவஂஜாவியி॥

உிதாவாஷ்ஂ வ்ரவஂஜயெக்ஷ । தத்ர வ்ராமஂஊமைத்ரைஃஷஜ்ஞிஃ
ஸஂதைத்ரஃ வஞுவிஂஶதிகொஷ்டஂ ஸஂவாஊ்ய, தெஷாஂ
ஊயாகொஷ்டவஞுகெ வீத-ஈஜஸா ஹஂஷிளித

'ஒஂ ஹாஂ வரயிவீதகாய நஃ'

'ஒஂ ஹாஂ வரயிவீதகாயிவதயெ ஸ்ரஹ்மணெ நஃ'

நைஜுதகொஷ்டசதஂஷ்யெ ஶ்வேத-ஈஜொவிஈசிதெ

'ஒஂ ஹாஂ கஷ்தகாய நஃ'

'ஒஂ ஹாஂ கஷ்தகாயிவதயெ விஷ்ணவெ நஃ'

கூஷ்ரயகொஷ்டசதஂஷ்யெ ஈக்த-ஈஜொவிஈசிதெ

'ஒஂ ஹாஂ தெஜஷ்தகாய நஃ'

'ஒஂ ஹாஂ தெஜஃ க்காயிவதயெ ஈஂஜாய நஃ'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிதாவஸ்து



கிழக்கு



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிதாவஸ்து



கிழக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization-Muthulakshmi Research Academy

வாயவ்யகொஷ்டகதஷ்டிய ... ஹ்ண-ஈஜஸா-வ்ருதெ

'ஓம் ஹாம் வாயுதகாய நமஃ'

'ஓம் ஹாம் வாயுதகாயிவதயெ ஈஶானாய நமஃ'

ஈஶாநகொஷ்டகதஷ்டயெ ஸித-ஈஜஸா-ஹரித-ஈஜஸாவா-யுதெ

'ஓம் ஹாம் க்ஷுகாஶதகாய நமஃ'

'ஓம் ஹாம் க்ஷுகாஶதகாயிவதயெ ஸதாஶிவாய நமஃ'

வீத-க்ருஷ்ண-ஶ்வேத-ஈக்த-ஈஜோ-விஈசிதெஷு பூர்வ-தக்ஷிண-பஶ்சிம-உத்தரகொஷ்டெஷு

'ஓம் ஹாம் இந்த்ராய நமஃ'

'ஓம் ஹாம் யமாய நமஃ'

'ஓம் ஹாம் வருணாய நமஃ'

'ஓம் ஹாம் குபெராய நமஃ' இதெ்யவம்-க்ரமெண

மந்த்ரைஃ கல்பயித்வா, ஸ்வாஹாந்தம் பலிம் தத்வா,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈஶான மூலையில் வர்த்தனீ கலஶத்தில் பாஶுபதாஸ்த்ரத்தை ப்ரதமாவரண பர்யந்தம் பூஜித்தல்.

𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍈𑌶𑌾𑌨𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑍃𑌤𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌾𑌵𑌲𑍀 𑌪𑍁𑌨𑍍𑌯𑌾𑌂
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌸𑌨𑌾𑌯𑌾𑌂 𑌚𑍂𑌤𑌪𑌲𑍍𑌲𑌵𑌶𑌾𑌖𑌿
𑌕𑍁𑌸𑍁𑌮𑌸𑍍𑌰𑌗𑍍𑌧𑍃𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌾𑌰𑍂𑌢𑌾𑌯𑌾𑌂 ‘𑌓𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌸𑌨𑌾𑌯
